# காங்கயம் நகராட்சி
# சாதாரணகூட்டம்

**காங்கயம் நகராட்சியின் சாதாரண கூட்டம் நிகழும் சுபகிருது வருடம் தமிழ் மாதம் புரட்டாசி 12 ஆம் நாள் ஆங்கில வருடம் 2023 செப்டம்பர் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு காங்கயம் நகர்மன்ற கூட்டஅரங்கில் நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண் : 1**

**ந.க.எண்.742/2019/சி1**

காங்கயம் நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்குரிய ஐந்தொகை கணக்கு வரவு செலவு அறிக்கைகள் வருவாய் மற்றும் மூலதன கணக்குகள், குடிநீர் மற்றும் வடிகால் நிதி கணக்குகள் முடித்து தணிக்கைக்கு உரிய ஆவணங்கள் தயார் செய்து தணிக்கைக்கு அனுப்பிய வகையில் ஏற்படும் செலவினம் ரூ.70,000/- ஐ (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் இத்தொகையினை திரு.வைரவேல் என்பவருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 623 நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 2**

காங்கயம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவுக்கு 2023-2024 ஆம் ஆண்டுக்கான தூய்மை பணியாளர்களுக்கு சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் சீருடை மற்றும் காலணிகள் அதற்க்கான தையற்க்கூலி ஆகியவை வழங்க உத்தேசமாக ரூ.4.00 (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) இலட்சத்துக்கான செலவுகள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். மேற்படி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் கோ ஆப்டெக்ஸ் நிறுவனங்கள் மூலமாக நேரடியாக கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.** 1227/2023/எச்1

| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 624 நாள் : 29.09.2023 |
| --- | --- | --- |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 3**

திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின் படி மகளிர் உரிமைத் திட்டத்திற்கு கொடுவாய் அருகில் உள்ள ஆர்.வி.எல் மண வளாகத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக மொபைல் கழிப்பிடம் அமைத்திட காங்கயத்தில் இருந்து கரூர் மாநகராட்சி சென்று எடுத்து வரவும் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்திய பின்பு மீண்டும் கொடுவாய் ஆர்.வி.எல் மண வளாகத்திலிருந்து கரூர் மாநகராட்சிக்கு திருப்பி கொண்டு சென்று ஒப்படைத்தமைக்கு வாடகை, பேட்டா மற்றும் ஏற்று இறக்கு கூலி உள்பட தொகை ரூ. 18000/- (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண். 559/2022/எச்1**

| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 625 நாள் : 29.09.2023 |
| --- | --- | --- |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 4**

காங்கயம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகாக நிலவேம்பு குடிநீர் அன்றாடம் பொதுமக்களுக்கு வழங்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1.00 (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) இலட்சத்துக்கான செலவுகள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண். /2023/எச்1**

| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 626 நாள் : 29.09.2023 |
| --- | --- | --- |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 5**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:5 பஜனைமட வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் உள்ள GI குழாய்கள் சேதமடைந்து தண்ணீர் வருவதில்லை. மேலும், அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, சேதமடைந்த பழைய GI குழாய்களை அகற்றி புதியதாக PVC குழாய்களை ஆழ்குழாய் கிணற்றினுள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.0.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: /2023/இ1)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | **627** நாள் : **29.09.2023** |
| **<u>தீர்மானம்</u>** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 6**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் மின்விளக்குகள் மற்றும் கணினி ஆகியவை மின்துண்டிப்பு ஏற்படும் பொழுது பயன்படுத்த முடியாமல் உள்ளது. இதனால் கணினி இயந்திரங்கள் பழுதடைந்து விடுகிறது . மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகங்களில் நடைபெறும் Video conference காணொலியில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்ளும் பொழுது அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் ஆய்வு கூட்டங்களில் இடையே கணினி இயங்காமல், ஆய்வுக் கூட்டத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, அலுவலகத்திற்கு புதியதாக 2 Inverter களை வாங்கி பொருத்த வேண்டியுள்ளது. இதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு (மூன்று இலட்சத்தி ஐம்பாதயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: /2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 628 நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 7**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்** காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பள்ளி குழந்தைகளுக்கு உணவு வழங்க தட்டுகள், டம்பளர்கள், கரண்டி, பக்கெட்டுகள், பெயர் பலகைகள் மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பணி அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 2023 பகுதி 235 (2) ன் கீழ் தொகை ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்: 1067/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 629 நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 8**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:15 பங்களாபுதூர் சாலையில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டி பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. மேற்படி

தரைமட்ட தொட்டியினை பழுது பார்த்து உபயோகத்திற்கு கொண்டு வருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே அப்பகுதியிலுள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தரைமட்ட குடிநீர் தொட்டியை பழுது பார்க்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.0.65 இலட்சத்திற்கு (ரூபாய் அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**: /2023/இ1)

| <u>**நகர்மன்ற தீர்மான எண்.**</u> | **:** | **630** நாள் **: 29.09.2023** |
|---|---|---|
| <u>**தீர்மானம்**</u> | **:** | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 9**

காங்கயம் நகராட்சியில் வருவாய் பிரிவு, கணினி பிரிவு மற்றும் பொறியியல் பிரிவிற்கு அலுவலக உபயோகத்திற்கு கீழ்க்கண்டவாறு உபகரணங்கள் தேவைப்படுகிறது.

1. **கணினி – 5 எண்ணிக்கை**
2. HP 305 Printer -1 எண்ணிக்கை
3. Tonner -10 எண்ணிக்கை

மேற்கண்ட உபகரணங்களை வாங்க உத்தேச மதிப்பீடு ரூ.4.97 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. இப்பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**: 0157/2023/இ1)

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 631 நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 10**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:13 சத்யா நகர் பகுதியில் உள்ள சாக்கடை கழிவு நீர் செல்ல வழியில்லாமல் பொதுப்பணித்துறை கால்வாயில் வழிந்தோடுகிறது. இதனை தடுக்க அப்பகுதியில ஒரு உறிஞ்சு குழி (Soak Pit) அமைத்து கழிவு நீரை ஒரு sullage Lorry மூலம் அகற்றினால் அப்பகுதியில் சுகாதாரம் காக்கப்படும். எனவே சத்யா நகர் பகுதியில் ஒரு Soak Pit அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.0.40 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**: /2023/இ1)

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 632 நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 11**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்:TN 56Y 1031 கடந்த 2008ம் ஆண்டு புதியதாக வாங்கப்பட்டது. மேற்படி ஈப்பு வாகனம் தற்போது 15 ஆண்டுகள்

முடிவடைந்த நிலையில் காலாவதியாகி உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும், அடிக்கடி பழுதடைவதால் தள ஆய்விற்கும் மற்றும் திருப்பூர் மண்டல, ஆய்வு கூட்டங்களுக்கு செல்ல தடையாக உள்ளது. ஆதலால், அவ்வாகனத்திற்கு பதிலாக புதியதாக Bolero அல்லது Scorpio வாகனம் வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி ஈப்பு வாகனம் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1201/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | **:** | **633** நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | **:** | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 12**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **9** வரையிலான பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்து பொருத்த வேண்டியுள்ளது. இந்த பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.**10.00** இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1 .**மன்றம் அனுமதிக்கலாம்

**2.** மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**3.** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். /2023/ இ1**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | **:** | **634** நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | **:** | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 13**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையிலான பகுதிகளில், மின் மோட்டார்கள் மற்றும் சிறு மின்விசைப்பம்பு ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதி உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்து பொருத்த வேண்டியுள்ளது. இந்த பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1 .மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். /2023/இ1**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 635 நாள் : 29.09.2023 |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 14**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரையிலான பகுதிகளில் மின் மோட்டார்கள் மற்றும் சிறு மின்விசைப்பம்பு ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதி உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்து பொருத்த வேண்டியுள்ளது. இந்த பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1 .மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். /2023/ இ1**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | **636** நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 15**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரையிலான பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதி உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்து பொருத்த வேண்டியுள்ளது. இந்த பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**3.** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். /2023/ இ1**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | **637** நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 16**

காங்கயம் நகராட்சி நகர்மன்ற தலைவர், ஆணையாளர், நகர்மன்ற துணை தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்க வேண்டியுள்ளது. ஆதலால் மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.0.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1109/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | **638** நாள் : **29.09.2023** |
| **<u>தீர்மானம்</u>** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 17**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் கால்வாய்யினை தூர் எடுத்து சுத்தம் செய்ய புதியதாக தனியார் கிட்டாச்சி இயந்திரம் வாங்கும் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:02.08.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 30.08.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | எஸ்.சுப்பையா | மதிப்பீட்டை விட – 0.10% குறைவு |
| 2 | ஆர்.வடிவேல் | மதிப்பீட்டை விட +0.61 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.10% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 943/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | **639** நாள் : **29.09.2023** |
| **<u>தீர்மானம்</u>** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**பொருள் எண் : 18**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:16 பாரதியார் நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதியில் குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணிக்கு ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:02.08.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 30.08.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/S Sakthi Engineering | மதிப்பீட்டை விட – 0.07% குறைவு |
| 2 | M/S Sivam Associates | மதிப்பீட்டை விட +3.64 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.07% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/S Sakthi Engineering அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 944/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | **640** நாள் : **29.09.2023** |
| **தீர்மானம்** | : | மன்றம் அனுமதிக்கப்பட்டது.. |

**(ஒ.ம்) திரு.ந. சூர்யபிரகாஷ்**
**நகர்மன்றத்தலைவர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மைநகல் /**

**ஆணையாளர்**
**காங்கயம் நகராட்சி**